StudentBounty.com

**Series HRS**

**Code No.**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **24** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **17** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# SUMMATIVE ASSESSMENT – II

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 90*

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 90*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | | |
|---|---|---|---|
| **பிரிவு அ** | : | படித்தல் (உரைநடைப்பகுதி) | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | : | Reading Comprehension | *15 Marks* |
| **பிரிவு ஆ** | : | எழுதுதல் | *20 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | : | Writing | *20 Marks* |
| **பிரிவு இ** | : | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | : | Grammar | *15 Marks* |
| **பிரிவு ஈ** | : | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | *40 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | : | Literature / Text Books | *40 Marks* |



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

குறிப்பு - எழுத்துத் தெளிவு பிழையின்மை சிறந்த கருத்துக்களுடன் வினா எண்களை உள்ளபடி எழுதல் சிறந்த விடைத்தாள்களாகும். அவற்றிற்கு உரிய மதிப்பெண்கள் கிடைப்பதும் உறுதி.

## பகுதி அ

**1.** பின்வரும் பகுதியைப் படித்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக : *5*

சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித் திரும்புவதற்கு அந்தப்பூவில் உள்ள 'போட்டோட்ரோபிஸம்' என்ற இயக்கம் தான் காரணம். இந்த இயக்கத்திற்குச் சூரியனின் ஒளிக்கதிர் மிகவும் அவசியம். இதனால் இந்தப்பூ கிழக்கு, மேற்கு திசையைக் காட்டக் கூடியதாக உள்ளது. இதேபோல சில்பியம் லேசினியேட்டம் என்ற செடியும் திசைகாட்டும் வேலை செய்கிறது. இந்தச்செடி வட ஆப்பிரிக்கா நாட்டில் வளர்கிறது. ஆறுஅடி உயரம்வரை இந்தச் செடி வளரும். தண்டுப்பகுதியில் கீழே அதிக இலைகளும் மேலே செல்லச்செல்ல இலைகள் குறைந்து கொண்டும் வரும். இலைகள் மொரமொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும். அவை வடக்கும் தெற்குமாகவே எப்போதும் இருக்கும். திசைகாட்டும் கருவியில் உள்ள காந்தமுள் வடக்கும் தெற்குமாக நின்று திசை காட்டுவதுபோல இந்த இலையும் காட்டுவதால் இந்தச் செடிக்கு காம்பஸ் என்ற பெயரும் உண்டு.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

**வினாக்கள் :**

(i) சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித்திரும்பக் காரணமாக இருப்பது எது ?

(அ) காந்த இயக்கம்

(ஆ) இயற்கைநியதி

(இ) போட்டோட்ரோபிஸம்

(ஈ) நிலத்தின் தன்மை

(ii) சில்பியம் லேசினியேட்டம் என்ற செடி எந்த நாட்டடில் காணப்படுகிறது ?

(அ) இந்தியாவில்

(ஆ) அமெரிக்காவில்

(இ) தென்னாப்பிரிக்காவில்

(ஈ) வடஆப்பிரிக்காவில்

(iii) சில்பியம் லேசினியேட்டம் செடி எவ்வளவு உயரம் வளரும் ?

(அ) மூன்றடி உயரம்

(ஆ) ஆறடி உயரம்

(இ) ஐந்தடி உயரம்

(ஈ) இரண்டடி உயரம்

(iv) சில்பியம் லேசினியேட்டம் செடியின் இலைகளின் தன்மை யாது ?

(அ) மொரமொரப்பாகவும் எதிரெதிராகவும் இருக்கும்

(ஆ) பசுமையும் மென்மையுமாக இருக்கும்

(இ) தடித்திருக்கும்

(ஈ) முள்ளுடன் விளங்கும்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(v) சில்பியம் லேசினியேட்டம் செடிக்குரிய வேறு பெ
யாது ?

(அ) சூரிய காந்திச்செடி

(ஆ) போட்டோட் ரோபிஸம்

(இ) காம்பஸ் செடி

(ஈ) நச்சுச்செடி

2. பின்வரும் பகுதியைப் படித்து அதன்கீழ் கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடை எழுதுக : *5*

தெற்கு ஆசிய அளவில் மிக அதிக பல்லுயிர் பெருக்கமுள்ள பகுதியில் மேற்குத்தொடர்ச்சி மலையும் ஒன்றாகும். இம்மலைத் தொடர் இமயமலைத் தொடருக்கு அடுத்தபடியாக மிக அதிக அளவில் தனக்கே உரித்தான உயிரினங்களுக்குத் தாயகமாக விளங்குகிறது. கன்னியா குமரிக்குச் சற்று வடக்கே உள்ள மலைப்பகுதிதான் பல்லுயிர் பெருக்கைக் கொண்டுள்ளதாக விளங்குகிறது, பழனி மலைத்தொடரும் ஆனை மலைத்தொடரும் சந்திக்கும் பகுதியில் தான் 2695 மீட்டர் உயரமுள்ள ஆனைமுடி என்னும் மலை உள்ளது. தென்னிந்தியாவில் உள்ள உயரமானதும், இமயமலைக்குத் தெற்கே மிக அதிக உயரமுள்ள மலையும் இதுவேயாகும்.

அச்சுறுத்தப்பட்ட உயிரினங்கள் பட்டியலில் இருப்பதுதான் இங்குள்ள வரையாடு. இதுதவிர பலவேறு வகை ஆடுகள் காட்டெருமை போன்றவை இப்பகுதிக்குச் சொந்தமானவை. ஆசிய யானைகளைமிக அதிக



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

எண்ணிக்கையில் இப்பகுதியில் தான் காணமுடியும். இக்காரணங்களினால் மட்டுமே இந்த மலைத்தொடரை உலகப்பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

(i) மேற்குத் தொடர்ச்சிலையின் மிக உயரமான மலையின் உயரம்யாது ?

(அ) 3465 மீட்டர்

(ஆ) 2635 மீட்டர்

(இ) 2165 மீட்டர்

(ஈ) 2695 மீட்டர்

(ii) ஆனைமுடி மலை எங்குள்ளது ?

(அ) குற்றாலமலைக்குத் தெற்கே உள்ளது

(ஆ) கன்னியாகுமரிக்கு வடக்கே உள்ளது

(இ) பழனிமலைத் தொடரும், ஆனைமலைத் தொடரும் சந்திக்கும் இடத்தில் உள்ளது

(ஈ) கன்னியாகுமரிக்குத் தெற்கே உள்ளது

(iii) அச்சுறுத்தப்பட்ட உயிரினங்கள் பட்டியலில் இருப்பது .....

(அ) புள்ளிமான்

(ஆ) ஆசியயானை

(இ) வரையாடு

(ஈ) காட்டெருமைகள்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(iv) மேற்குத் தொடர்ச்சிமலை உலகின் எப்பகுதியி உள்ளது ?

(அ) அமெரிக்க நாட்டுப்பகுதியில்

(ஆ) ஐரோப்பா பகுதியில்

(இ) தெற்கு ஆசியப்பகுதியில்

(ஈ) ஆப்பிரிக்க நாட்டில்

(v) உலகப் பாரம்பரியச் சின்னமாக எதனை யுனெஸ்கோ அறிவித்துள்ளது ?

(அ) இமயமலைத்தொடரை

(ஆ) விந்திய மலைத்தொடரை

(இ) மேற்குத் தொடர்ச்சி மலையை

(ஈ) பழனி மலைத்தொடரும் ஆனைமலைத் தொடரும் இணைந்திடும் பகுதியை

3. பின்வரும் பகுதியைப்படித்து கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக : *5*

புறாக்கள் மனிதர்களை விட அன்பில் சிறந்தவை ஜோடி சேர்ந்தபின் ஒன்றையொன்று இணைபிரியாமல் இருக்கும். ஆண்புறா தனது இணைக்குச் சமமாகக் கூடினைக் கட்டும், அடைகாக்கும், குஞ்சுகட்கு உணவு ஊட்டும் பழங்காலத்தில் புறாக்கள் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. புறாக்களை வைத்துப் பறக்கும் பந்தயங்கள் நடத்தும் வழக்கமும்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

உண்டு. அறிமுகம் இல்லாத இடங்களுக்குப் பறந்து சென்று மீண்டும் தன் இருப்பிடம் வந்து சேரவேண்டிய திறமை அறிவு புறாக்களுக்குப் பிறவியிலேயே உண்டு, ஹோமர் எனப்படும் புறாக்கள் மிகச்சிறப்பானவை. புறாக்கள் இரவில் பறக்காது. புறாக்களை கூடுகளில் வளர்க்கலாம். காற்றோட்டமும், மழைநீர் ஒழுகாதபடியும் அவை இருக்கவேண்டும். தானியங்கள் புறாக்களின் உணவாகும். சுத்தமான நீரை எப்போதும் அவைபருகும் அளவில் கூடுகளில் வைத்தும், சிப்பித்தூள் உப்பு, சிறுகற்கள் கலந்து கூடுகளில் இருக்கும்படி வைத்தும் புறாக்களை வளர்க்கவேண்டும்.

(i) புறாக்களைக்கொண்டு பழங்காலத்தில் இருந்த வழக்கம் யாது ?

(அ) தூது சொல்ல அனுப்புவது.

(ஆ) தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வது.

(இ) புறாச்சண்டை நடத்துவது.

(ஈ) செல்லப்பறவையாய் வளர்ப்பது.

(ii) புறாக்களுக்குப் பிறவியிலேயே அமைந்த திறமை யாது ?

(அ) வேகமாகப் பறந்து செல்வது

(ஆ) எதிரிப் புறாக்களிடம் அன்புகாட்டுவது

(இ) அறிமுகம் இல்லாத இடங்களுக்குப் பறந்து சென்று மீண்டும் இருப்பிடம் வந்துசேர்வது

(ஈ) உணவு உண்ணாமல் பலநாள் வாழ்வது



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(iii) புறாக்கள் எப்போது பறக்காது ?

(அ) இரவில்

(ஆ) மழைக்காலத்தில்

(இ) பகலில்

(ஈ) கடும்வெய்யில் நேரத்தில்

(iv) எதில் புறாக்கள் மனிதர்களை விடச்சிறந்தவை

(அ) சண்டையிடுவதில்

(ஆ) அன்பில்

(இ) வீரத்தில்

(ஈ) அறிவில்

(v) புறாக்களின் உணவு யாது ?

(அ) பூச்சிகள்

(ஆ) தானியங்கள்

(இ) சிறுகற்கள்

(ஈ) புழுக்கள்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

# பகுதி ஆ

4. போக்குவரத்து நெரிசல் மிக்க சாலைகளில் திரியும் கால்நடைகளால் ஏற்படும் இடையூறுகளை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி மாநகராட்சி ஆணையர்க்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் எழுதுக. *8*

**அல்லது**

புகையிலைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து அதற்கடிமையான உனது உறவினர் ஒருவருக்கு அறிவுரைக் கடிதம் எழுதுக.

(உனது முகவரி பூரணி/பூரணன் எண் 1. இளங்கோ நகர் முதல்தெரு, மடிழப்பாக்கம் சென்னை. எனக்கொள்க.)

5. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒரு பகுதியில்** கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. *8*

(i) அரிது அரிது மானிடராதல் — வாழ்வின் சிறப்பு அடிப்படை நல்லொழுக்கங்கள் — தடுமாறச் செய்யும் சூழ்நிலைகள் — மனக்கட்டுப்பாடும் உறுதியும் — வளமான வாழ்வு — நிம்மதியான முதுமை.

(ii) வாழ்வாதாரம் செல்வம் — உழைப்பும் ஊதியமும் — முறையான வருமானம் — பேராசை பெருநட்டம் — பாதுகாப்பான சேமிப்பு — சீரான வாழ்வு.

(iii) கோடைகாலமும் குளிர்பானங்களும் — இயற்கையான குளிர் பானங்கள் — எளிமையான குளிர்பான்ங்கள் — செயற்கையான குளிர்பானங்கள் — அவற்றால் ஏற்படும் செலவுகளும் பக்கவிளைவுகளும் — நலவாழ்வுக்கு இயற்கையின் படைப்பும் அதனை அளவுடன் பயன் படுத்தி நன்மை பெறுதலும்.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

6. நீ வாழும் பகுதியில் நடைபெற்ற முதியோர் நல... சமுதாயத்தின் கடமையும் குறித்த விழிப்புணர்வு முகாம்.

**அல்லது**

நீ வாழும் பகுதியில் நடைபெற்ற மது அருந்தாமை உறுதிமொழி எடுத்துக் கொண்ட நலவாழ்வு மைய உறுப்பினர்களின் விழிப்புணர்வு நடைப்பயணம் பற்றிய அறிக்கை எழுதுக.

## பகுதி இ

7. சான்று தருக (**மூன்றனுக்கு** மட்டும்) : *3*

(i) இயல்புப்புணர்ச்சி

(அ) முத்தமிழ்

(ஆ) தேன்மொழி

(இ) கற்சிலை

(ஈ) கடலலை

(ii) மையீற்றுப்புணர்ச்சி

(அ) மலைக்குகை

(ஆ) மற்போர்

(இ) பொன்னடி

(ஈ) விற்றிறம்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

(iii) குறிஞ்சிநிலப் பறவைகள்

(அ) நாரை, அன்னம்

(ஆ) புறா, பருந்து

(இ) கடற்காகம்

(ஈ) கிளி மயில்

(iv) வஞ்சப்புகழ்ச்சியணி

(அ) பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

(ஆ) தேவ ரனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்

(இ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால
மிகுத்துப் பெயின்

(ஈ) சொல்லுக சொல்லிற் ப்யனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்

(v) குற்றியலுகரப்புணர்ச்சி

(அ) வடக்கு + திசை

(ஆ) விலை + பட்டியல்

(இ) கல் + கண்டு

(ஈ) மேல் + படிப்பு



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

8. நிரப்புக (**மூன்று** மட்டும்) *3*

(i) திணை ____________ வகைப் படும்.

(அ) மூன்று

(ஆ) நான்கு

(இ) இரண்டு

(ஈ) ஐந்து

(ii) வயலும் வயல்சார்ந்த இடமும் __________ எனப்படும்.

(அ) பாலை

(ஆ) குறிஞ்சி

(இ) மருதம்

(ஈ) முல்லை

(iii) விகாரப்புணர்ச்சி ________ வகைப்படும்.

(அ) ஐந்து

(ஆ) இரு

(இ) மூ

(ஈ) நால்

(iv) பஃறொடை வெண்பா ஐந்தடிமுதல் ____________ அடிகள் வரை அமையும்.

(அ) ஆறு

(ஆ) எட்டு

(இ) பத்து

(ஈ) பன்னிரெண்டு



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(v) அகம் புறம் இரண்டும் ________ இலக்கணம் ஆகும்.

(அ) சொல்

(ஆ) எழுத்து

(இ) பொருள்

(ஈ) யாப்பு

9. கூறியவாறு செய்க (**மூன்று** மட்டும்) *3*

(i) வாள் + போர் : சேர்த்து எழுதுக.

(அ) வாள்போர்

(ஆ) வாற்போர்

(இ) வாப்போர்

(ஈ) வாட்போர்

(ii) பசுமை + புல் : சேர்த்து எழுதுக.

(அ) பைம்புல்

(ஆ) பசுமைப்புல்

(இ) பசும்புல்

(ஈ) பசுப்புல்

(iii) முட்புதர் : பிரித்தெழுதுக.

(அ) முட் + புதர்

(ஆ) மு + புதர்

(இ) முள் + புதர்

(ஈ) முட்டு + புதர்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

(iv) யார்க்கும் : அசைபிரித்திடுக

(அ) நேர் + நேர்

(ஆ) நிரை + நேர்

(இ) நேர் + நேர் + நிரை

(ஈ) நேர் + நிரை

(v) தமிழ் அளவுப்பண்புப்பெயர் : சேர்த்தெழுதுக

(அ) பைந்தமிழ்

(ஆ) செந்தமிழ்

(இ) முத்தமிழ்

(ஈ) நற்றமிழ்

**10.** இலக்கணக்குறிப்பு தருக (**மூன்று** மட்டும்) *3*

(i) வாலறிவன்

(அ) தேமாங்காய்

(ஆ) புளிமா

(இ) கூவிளங்காய்

(ஈ) புளிமாங்காய்

(ii) கருங்குயில்

(அ) மகரஈற்றுப்புணர்ச்சி

(ஆ) பண்புப்பெயர்ப்புணர்ச்சி

(இ) திசைப்பெயர்ப்புணர்ச்சி

(ஈ) இயல்புப்புணர்ச்சி



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(iii) பாடாண்திணை

(அ) பாடாண் + திணை

(ஆ) பாடு + ஆண் + திணை

(இ) பா + ஆண் + திணை

(ஈ) பாடு + ஆ + திணை

(iv) ஆவலுடன் காவலரும் ஆறுகால் வண்டினமும் காவலரைச் சூழும் கலசையே

(அ) செம்மொழிச்சிலேடை

(ஆ) தற்குறிப்பேற்றஅணி

(இ) வஞ்சப்புகழ்ச்சியணி

(ஈ) பிரிமொழிச்சிலேடை

(v) தற்காத்துத் தற்கொண்டார் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண் - ஈற்றுச் சீர்வாய்பாடு

(அ) ஈற்றுச்சீர் காசு

(ஆ) ஈற்றுச்சீர் பிறப்பு

(இ) ஈற்றுச்சீர் நாள்

(ஈ) ஈற்றுச்சீர் மலர்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

**11.** சரியான சொற்றொடரைத் தேர்ந்து எழுதுக. (**மூன்றனுக்கு** மட்டும்)

(i) (அ) வெண்பா இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்றுவரும்

(ஆ) வெண்பா ஒன்றிய வஞ்சித்தளை ஒன்றாவஞ்சித்தளை பெற்றுவரும்

(இ) நேர் ஒன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை பெற்றுவரும்

(ஈ) கலித்தளை பெற்றுவரும்

(ii) (அ) காடும் காடுசார்ந்த இடமும் மருதம்

(ஆ) காடும் காடுசார்ந்த இடமும் பாலை

(இ) காடும் காடுசார்ந்த இடமும் முல்லை

(ஈ) காடும் காடுசார்ந்த இடமும் மருதம்

(iii) (அ) நேர்நேர் நேர் — தேமாங்காய்

(ஆ) நேர்நேர் நேர் — கூவிளங்காய்

(இ) நேர்நேர் நேர் — புளிமாங்காய்

(ஈ) நேர்நேர் நேர் — கருவிளங்காய்

(iv) (அ) கருப்பொருள்கள் மொத்தம் பதினான்கு

(ஆ) கருப்பொருள்கள் மொத்தம் பத்து

(இ) கருப்பொருள்கள் மொத்தம் பன்னிரெண்டு

(ஈ) கருப்பொருள்கள் மொத்தம் ஐந்து



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(v) (அ) அகத்திணைகள் ஏழுவகைப்படும்

(ஆ) அகத்திணைகள் ஐந்து வகைப்படும்

(இ) அகத்திணைகள் நான்குவகைப்படும்

(ஈ) அகத்திணைகள் ஆறுவகை

## பகுதி ஈ

12. உரைநடைப் பகுதியைப் படித்து, கீழே கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக : 5

போராட்ட முறைகள் இருவகைப்படும். ஒன்று போர்முறையில் உரிமையை நிலைநாட்டுவது. மற்றொன்று அறவழியில் உரிமைப்போர் செய்து வெற்றிபெறுவது. காந்தியடிகள் இவற்றில் அறப்போர் முறையினில் தன் வழியைத் தேர்ந்தெடுத்தார். மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாகப் பிறருக்குத்துன்பம் தராததாக இருக்க வேண்டும் என்றார் அவர். ஆங்கிலேயரைத் துன்புறுத்தி விடுதலைபெறுவதைவிட அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து வெற்றிபெறுவதே சிறந்தது என்றார்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

நேதாஜி போன்றோர் போர்முறையைக் கையாண்டு தான் விடுதலை பெறமுடியும் என்றபோது, காந்தி வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத்தீயால் அணைக்க முற்படுவது போன்றது என்று கூறினார். நெருப்பை நீரால் அணைக்க முடியும். அன்பு, அருள் ஆகிய வழிமுறைகளால் வன்முறையைத் தடுக்கமுடியும். அறவழியைப் பின்பற்றிப் பெறுகிற விடுதலையே நிலைக்கும் என்றார் காந்தியடிகள்.

(i) காந்தஜி எப்போர் முறையைத் தேர்ந்தெடுத்தார் ?

(அ) அறப்போர்

(ஆ) மறப்போர்

(இ) வன்முறைப்போர்

(ஈ) இரண்டுமுறைகளும் கலந்தபோர்

(ii) போர் முறையைக்கையாண்டு தான் வெற்றிபெறமுடியும் என்றவர்யார் ?

(அ) நேருஜி

(ஆ) காந்திஜி

(இ) நேதாஜி

(ஈ) இராஜாஜி



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

(iii) நெருப்பை அணைக்க உதவுவது எது ?

(அ) காற்று

(ஆ) தண்ணீர்

(இ) அறிவு

(ஈ) ஆற்றல்

(iv) எவ்வகை கவிடுதலை நிலைத்து நிற்கும் ?

(அ) போர் முறை விடுதலை

(ஆ) அறவழியில் பெறும் விடுதலை

(இ) வேலைநிறுத்தத்தால் பெறும் விடுதலை

(ஈ) அடிமையாய் இருந்து பெறும் விடுதலை

(v) வன்முறையை எவற்றால் தடுக்க இயலும் ?

(அ) அன்பு, அருள்

(ஆ) ஆணவம், கோபம்

(இ) அச்சம், அடிமை

(ஈ) வீரம், விவேகம்

13. பின் வரும் உரைநடைப் பகுதியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு உரிய விடைகளைத் தேர்ந்து எழுதுக. 5

இன்றைய வாழ்வில் பொறியியல் பெரும் பங்கு வகிக்கிறது. பல்வேறு எந்திரங்கள் பொறியியல் மூலம் உருவாக்கப்படுகின்றன. பண்டைத் தமிழகத்தில் எந்திரவியல் அறிவு ஆழமாக இருந்திருக்கிறது. கரும்பைப் பிழிவதற்கும் எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன எனப்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

பதிற்றுப்பத்து குறிப்பிடும். நிலத்தைத் துளைத்து நீ இறைக்கும் ஆழ்துளைக் கிணறு அக்காலத்தில் இருந்திருக்கலாம் எனப் பெருங்கதை வரிகள் மூலம் அறிய முடிகிறது. பெருங்கதையில் வரும் எந்திரயானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் டிராய் போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.

(i) பல்வேறு எந்திரங்கள் உருவாக்க உதவுவது எது ?

(அ) மண்ணியல்

(ஆ) விண்ணியல்

(இ) பொறியியல்

(ஈ) அணுவியல்

(ii) கரும்புபிழியும் இயந்திரங்கள் இருந்ததை எந்நூல் விளக்குகிறது ?

(அ) புறநானூறு

(ஆ) கலித்தொகை

(இ) பதிற்றுப்பத்து

(ஈ) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

(iii) கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் போர்

(அ) டிராய்

(ஆ) பனிப்போர்

(இ) ஆயுதப்போர்

(ஈ) அறப்போர்

10



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

(iv) இன்றைய வாழ்வில் பெரும்பங்கு வகிப்பது எது ?

(அ) இயந்திரவியல்

(ஆ) பொறியியல்

(இ) அறிவியல்

(ஈ) மண்ணியல்

(v) எந்திரயானை பற்றி எந்நூல் விளக்குகிறது ?

(அ) சிறுகதை

(ஆ) பெருங்கதை

(இ) குறுந்தொகை

(ஈ) புறநானூறு

14. பின்வரும் செய்யுட் பகுதியைப்படித்து, கொடுக்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடைதருக : *4*

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

(i) வித்துவக்கோடு எவற்றால் சூழப்பட்டது ?

(அ) மரங்களால்

(ஆ) கோயில்களால்

(இ) நீள்வயல்களால் சூழப்பட்டது

(ஈ) குளங்களால்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

(ii) தார் என்பதன் பொருள்யாது ?

(அ) மாலை

(ஆ) மலை

(இ) அழகு

(ஈ) சிம்மாசனம்

(iii) குடி என்பது எப்பொருள் தரும் ?

(அ) பருகுதல்

(ஆ) மக்கள்

(இ) பகைவர்கள்

(ஈ) திருவடி

(iv) இப்பாடல் எத்தொகுப்பில் அமைந்தது ?

(அ) தேவாரம்

(ஆ) கலித்தொகை

(இ) நாலாயிர திவ்யப்பிரபந்தம்

(ஈ) அகநானூற்றில்



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

15. எவையேனும் **இரண்டு** உரைநடை வினாக்களுக்கு விடைதருக :

(i) பண்டைத் தமிழர் வாழ்வு எவற்றின் அடிப்படையில் அமைந்திருந்து சிறந்திருந்தது ? விவரிக்க.

(ii) பண்டைக் காலத் தமிழரின் கனிமவியல், மண்ணியல் பற்றிய அறிவாற்றல்களை விவரிக்க.

(iii) வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் குறித்து விளக்கி எழுதுக.

(iv) தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி பற்றி விளக்குக.

(v) இன்னாசெய்யாமை, மனிதநேயம் பற்றிய காந்தியடிகளின் கருத்துக்களை விவரிக்க.

16. எவையேனும் **இரண்டு** செய்யுட்பகுதி வினாக்களுக்கு விடைதருக : *8*

(i) முத்தமிழ் எவ்வெப் பொருள்களாய் விளங்குவதாக தமிழ் விடுதூது கூறுகிறது ? ஏன் ?

(ii) இறைவன் திருவடியை வணங்குபவர் எத்தன்மையர் ? விவரிக்க.

(iii) பொருளின் சிறப்பையும், பொருளீட்டும் நெறியினையும் வள்ளுவர் வழியே விவரிக்க.

(iv) 'நிற்க நேரமில்லை' பாடல் கூறும் கருத்துக்களை விவரிக்க.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

17. ஏதேனும் **ஒரு** துணைப்பாட வினாவிற்கு விளக்கமான விடைதருக :

(i) அகழ்வாய்வுகளும் அவற்றின் பயன்களும் பற்றி விவரிக்க.

(ii) 'குறட்டை ஒலி' கதையில் வரும் குடும்பத்தினர் நிலை பற்றி விவரிக்க.

(iii) தமிழகத்தில் நூலக வளர்ச்சித்துறையில் உருவான புதிய மறுமலர்ச்சியை விவரிக்க.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers